නවෝදය   நவோதயம்   Codesep




වතු සමාජ සංවර්ධන සේවාව

ගාල්ල රදගුරු වසම

தோட்ட சமூக அபிவிருத்தி சேவை

காலி மறை மாவட்டம்

**Community Development Service for Plantations**

**Diocese of Galle**

# 'நவோதயம் செயற்திட்டம் "

‘‘ மனிதனின் மாண்பே இறைவனின் மகிமை’’

## முகவுரை

'நவோதயம்" செயற்திட்டமானது தென் மாகாணத்தில் வாழும் பெருந்தோட்டத்துறை மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக, தென் மாகாண கத்தோலிக்கச் சபையினால், தெனியாய,கத்தோலிக்க ஆலய வளவிலுள்ள நிலையத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் நடவடிக்கையாகும்.

காலி மாவட்டத்தின் அல்பிட்டிய, உடுகம, பத்தேகம நகரங்களை அண்மித்த தோட்டங்களும் மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ, பிடபத்தர, தெனியாய நகரங்களை அண்மித்த தோட்டங்களும் இச் செயற்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## *நோக்கம்*

*அன்பு,நீதி மற்றும் சமாதானம் எனும் நற்செய்தி பண்புகளை அடிப்படையாகக் கொண்டு,அனைத்து இனங்களையும் மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிற தென் மாகாண மலையக மக்களுக்களின் மனித மாண்பிற்காக கல்வி, பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் சமய முன்னேற்றம்*

## *பணி*

*அ. சமுதாயத்தில் பின் தங்கிய,வலுவிழந்த நியைிலுள்ள இம் இச் சமூகத்தின் ஒவ்வொருவரும் மனித மாண்பையும் கௌரத்தையும் பெறுவதற்காக செயற்படுதல்*

*ஆ. தென் மாகாண மலையக மக்கள் பிற இன மக்களுடன் ஒற்றுமையுடன் வாழ ஒத்துழைப்பை அளித்தல்.*

## செயற்திட்டம் நடைமுறைப்படுத்துகையில் கிடைக்கும் பயன்கள்:

1. பெருந்தோட்டதுறை மக்களை அறிவூட்டுவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்

2. அறிவுமிக்கதும் முன்னேற்றமிக்கதுமான பெருந்தோட்ட துறை மக்கள் ஏற்படுவதை பெருந்தோட்ட துறையின் அபிவிருத்தியை ஏற்படுத்தல்

3. முன்னேற்றமடைந்த மக்கள் அமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்குத் துணை புரிதல்

## செயற்பாடுகள்:

### *(அ) கள தரிசிப்பின் மூலம் தகவல் சேகரித்தலும் குழுக்களை அமைத்தலும்*

1. செயற்திட்டத்தின் முழு நேர பணிக்காக தென் பகுதி தோட்டத்துறையிலிருந்து 15 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களை ஊக்குவிப்பாளர்களாக்க பயிற்சிகளை வழங்குதல்.

2. தேர்ந்தெடுத்த தோட்டங்களின் புவியியல் சுற்றுப்புறத்திற்கு ஏற்ப வாழுகின்ற 40-50 வரையிலான குடும்பங்களைத் தெரிந்து குழுக்களை அமைத்தல்.

3. அவ்வாறு உருவாக்கப்பட்ட குழுக்களில் மேற்குறித்த தளங்கள் பற்றிய அறிவினை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் அவர்களை செயன்திறன் மிக்க உறுப்பினராக மாற்றுதல்

### *(ஆ) பெரியோர்கள்*

1. குழுக்களில் சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்தல்

2. தலைமைத்துவம் பற்றிய செயலமைர்வுகளை நடாத்தல்

3 மாலை நேரங்களில் முதியோருக்காக கல்வி திட்டத்தினை மேற்கொள்ளல்

### *(இ) கல்வி*

1. ஆசிரியர்களின் பற்றாக்குறை அதிகளவில் காணப்படும் 10 பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களை நியமித்தலும் மாதாந்த பயிற்சிகளை அவர்களுக்கு வழங்குதலும்
2. இந்த 10 தோட்டப் பாடசாலைகளில் 11ஆம் ஆண்டில் கல்வி பயிலும் 10 மாணவர்களுக்கு சாதாரணத் தரம் வரையிலும் உயர் கல்வி பயிலும் 06 மாணவர்களுக்கு உயர் தரம் வரையிலும் கல்விக்கான உதவியை வழங்கல்

### *(ஈ) இளைஞர் யுவதிகள்*

1. இளைஞர் யுவதிகளுக்கான தொழில் நுட்ப பயிற்சிகளுக்கு உதவியளித்தல்

2. தோட்டத்துறையின் இளைஞர்கள் சமுதாயத்தில் காணக்கிடக்கும் தவறான வழிகளிலிருந்து பாதுகாப்பதற்காக அவர்களை விளையாட்டு துறைகளில் ஈடுபடுத்தி எமது 'நவோதய' குழுக்களின் அங்கத்தவர்களின் மத்தியில் 'நவோதய' கேடயத்திற்கான கிரிக்கெட் போட்டியினையும், வெற்றி பெறும் குழுவை பிரதேசத்தில் ஏனைய விளையாட்டுக் கழகங்களோடு உறவை வளர்க்கும் நோக்கத்துடன் போட்டியினை ஏற்பாடு செய்தல்.

### *(உ) சமூக கலாச்சாரம்*

1.தென்பகுதி தோட்டபுற இளைஞர் யுவதிகளுக்கான 'நவோதயம்' கலா மன்றத்தை ஏற்படுத்தல்.

2. மத நிகழ்வுகளின் போது, மதங்களுக்கிடையே இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கும் விதத்திலான பொது நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

### *(ஊ) சுகாதாரம்*

1. தோட்ட புற இளைஞர் யுவதிகள் மத்தியில் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்
2. ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் இரண்டு யுவதிகளைத் தேர்ந்தெடுத்து அடிப்படை சுகாதார பயிற்சிகளை வழங்கல்

## முடிவுரை

மேற்குறித்த செயற்திட்டங்களின் அடிப்படையில் 'நவோதயம்' செயற்திட்டமானது, தென்பகுதியில் இன மத பேதமின்றி சிறந்தவொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புதலையே நோக்காகக் கொண்டு செயற்படும்.

**இச்சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக தங்களின் கருத்துக்கள் மற்றும் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்**

***இச்செயற்திட்டத்தினை திறன்பட மேற்கொள்வதற்கு எமக்கு ஒத்துழைப்பை நல்கும்***

- தென்பகுதி கத்தோலிக்கச் சபையின் அதி வண. ஆயர் அவர்களுக்கும்
- பண உதவிகளை வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கும்
- பெருந்தோட்டத்துறை அதிகாரிகள், மற்றும் தோட்ட அதிகாரிகள் மற்றும் பொது நல நிர்வாகிகளுக்கும்
- மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும், கிராம சேவையாளர்களுக்கும்
- பொலிஸ்,கல்வி, மற்றும் சுகாதார துறையின் அதிகாரிகளுக்கும்
- அணைத்து நலன் விரும்பிகளுக்கும்

*எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்*

இச் செயற்திட்டம் தொடர்பிலான மேலும் தகவல்களை அறிய விரும்பின் கீழ் காணும் விலாசத்தோடு எம்மை தொடர்பு கொள்ளவும்.

நன்றி இறை ஆசீர்.

**இயக்குனர் / இணைப்பாளர்**
'நவோதயம்' செயற்திட்டம்
புனித சூசையப்பர் ஆலயம்
தெனியாய.
041-227-3216